**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை</u>

**<u>அ.வ.எண்.407/2015</u>**

ரத்தினகுமார் ... வாதி

/ எதிர் /

1) செல்லமுத்துகவுண்டர்
2) சொரூபராணி
3) மகாலிங்கம் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 14.10.2015 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே கோப்புக்கு எடுக்கப்பட்டு 24.01.2023 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாதியின் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம் முன்னிலையாகியும் வழக்கு விசாரணையின்போது பிரதிவாதிகள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்துக்களை நலந்திகிடு கலந்து பிரித்து அதில் 3ல் 2 பங்கு பாகத்தை தனி சுவாதீனத்துடன் வாதிக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படிக்கு பிரதிவாதிகளின் பேரில் ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும், தீர்ப்புரையும் பிறப்பிக்க கோரியும், தாவா செலவுத்தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டியும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII விதி 1ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வழக்குரையின் சுருக்கம்:</u>

1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி மகள் மற்றும் 3ம் பிரதிவாதி மகன் ஆவார்கள். 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.108/2B–யில் உள்ள 0.29 புஞ்சை ஏக்கரை நிலத்தை ரூ.1,06,000/–க்கு வாதிக்கு கிரையம் செய்து தருவதாக கூறி அதன் அடிப்படையில் கடந்த 10.07.2003 அன்று கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அதில் 3ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்திட்டுள்ளார். மேற்படி கிரைய உடன்படிக்கைபடி வாதி கிரையத்தொகையில் ரூ.50,000/–ஐ முன்பணமாக 1ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்படி வாதி சார்பாக 1ம் பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்காததால் 1ம் பிரதிவாதி பேரில் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.75/2005 என்ற வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கு கடந்த 14.12.2005 அன்று வாதி சார்பாக தீர்ப்பானது.

**2.2)** மேற்படி தீர்ப்பின்படி கிரையத்தை நிறைவேற்றி கொடுக்க பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் E.P.No.101/2006 என்ற மனுவை வாதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிறைவேற்று மனுவில் 2ம் பிரதிவாதி தாவா ஏ அட்டவணை சொத்தானது பிரிபடாத சொத்து என்றும், அதில் தனக்கு 1/3 பங்கு உள்ளதாக கூறி E.A.578/2007 என்ற மனுவை தாக்கல் செய்தார். மேற்படி E.A.578/2007 கடந்த 29.07.2013 தேதியன்று அனுமதிக்கப்பட்டு 2ம் பிரதிவாதிக்கு பாத்தயப்பட்ட 1/3 பங்கு போக 2/3 சொத்து வாதிக்கு கிரையம் செய்துகொடுக்கப்பட்டது. மேற்படி சொத்து வழக்கு பி அட்டவணை சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை சுவாதீனம் பெற நிறைவேற்று மனு E.P.No.88/2013 தாக்கல் செய்யப்பட்டபோது, பிரிபடாத சொத்தில் 2/3 பங்கு சொத்தை பொறுத்து கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதால், அந்த சொத்தில் பெயரளவில் மட்டுமே வாதிக்கு சுவாதீனம் உள்ளது என்றும், ஆகவே மனுவை தள்ளுபடி செய்து

பொள்ளாச்சி சார்வு நீதிமன்றம் உத்தரவிட்டது.

**2.3)** இவ்வாறிருக்கையில், 3ம் பிரதிவாதி, க.ச.நெ.108 ல் பு.ஹெக்.1.50.0, பு.ஹெக்.0.12.5 பூமி இருப்பதாகவும், அது பாகம் பிரிபாடாத சொத்து எனவும், அதில் பாகப்பிரிவினை வேண்டி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.291/2006 என்ற வழக்கை தாக்கல் செய்தார். மேற்கண்ட வழக்கில் கண்ட சொத்து இவ்வழக்கு சி அட்டவணை சொத்தாகும். மேற்படி வழக்கு கடந்த 03.10.2012 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.75/2005 வழக்கு தீர்ப்பிற்கு பிறகு மேற்சொன்ன நிறைவேற்று மனு எண்.101/2006 நிலுவையில் இருக்கும் போது 3ம் பிரதிவாதி மகாலிங்கம் வழக்கு சொத்தில் தனக்கும் பங்கு இருப்பதாகவும், ஆகவே தன்னையும் கட்சி சேர்த்திட வேண்டி E.A.No.1254/2006 என்ற மனுவை தாக்கல் செய்தார். எனினும், கிரைய உடன்படிக்கையில் 3ம் பிரதிவாதி மகாலிங்கம் சாட்சிகையெழுத்து செய்துள்ளார் என்ற எதிர்வாதத்தை ஏற்று அவர் மேற்படி மனுவை திரும்ப பெற்றுக்கொண்டார்.

**2.4)** கிரைய ஒப்பந்தப்படி 1ம் பிரதிவாதி செல்லமுத்துகவுண்டருக்கு சொந்தமான சொத்திலிருந்து 1ல் 3 பாக உரிமையை பொருத்து வாதி தனிவழக்கிடும் உரிமையை தக்கவைத்துக்கொண்டுள்ளார். பொள்ளாச்சி சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.75/2005 என்ற வழக்கில் தீர்ப்பு செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களிலும் "Share by Equity" அடிப்படையில் வாதிக்கு பாத்தியம் உண்டு என்றாலும், வழக்கு ஏ அட்டவணை சொத்தில் 29.07.2017 தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் கண்டுள்ளபடிக்கு 2/3 பங்கு மட்டும் பாகப்பிரிவினை கோரியுள்ளார். 1ம் பிரதிவாதி 2/3 பங்கு சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார். மேற்படி 2/3 பங்கு சொத்தை வாதி கிரையம் பெற்றுள்ளதால், வழக்கு ஏ அட்டவணை சொத்தில் வாதியும் கூட்டு பங்குதாரர் என்ற நிலையில் உள்ளார். எனவே, வழக்கு ஏ அட்டவணை சொத்தில் உள்ள வாதிக்கு பாத்தியப்பட்ட

சொத்தை பாகம்பிரித்துக்கொள்ள 2015 ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் பிரதிவாதிகளிடம் கேட்டபோது பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. மேலும், 3ம் பிரதிவாதிக்கு ஏ அட்டவணை சொத்தை பொறுத்து எந்தஒரு உரிமையும் இல்லை என்றாலும், எதிர்காலத்தில் எந்தவொரு வழக்கிற்கும் இடம்தராமல் இருப்பதற்காக அவரையும் இவ்வழக்கில் கட்சிசேர்க்கப்பட்டுள்ளது.

**3) <u>1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம் :</u>**

வழக்கு கூறப்பட்டுள்ள உறவுமுறையும், 1ம் பிரதிவாதிக்கு க..ச.எண்.108/2B யில் 0.29 புஞ்சை ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டு, மேற்படி சொத்து வாதிக்கு ரூ.1,06,000/-க்கு கடந்த 10.07.2003 அன்று கிரையம் செய்து தருவதாக வாதி, 1ம் பிரதிவாதிக்கு இடையே கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்பதும், அதில் 3ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்ற விபரமும், முன்பணமாக ரூ.50,000/- பெறப்பட்டுள்ளது என்ற விபரமும், வாதி மேற்படி கிரைய உடன்படிக்கைப்படி பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.75/2005 என்ற வழக்கு தாக்கல் செய்து, அது கடந்த 14.12.2005 அன்று தீர்ப்பானது என்பதும் சரியென ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**3.2)** 3ம் பிரதிவாதி பாகம் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.291/2006 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால், மேற்படி வழக்கில் க.ச.108ல் 1.05.0 ஹெக்டர், 0.12.5 ஹெக்டேர் சொத்தில் அனைத்து பிரதிவாதிகளுக்கும் உரிமையுள்ளது என்று 2ம் பிரதிவாதி கூறினார் என்பது தவறாகும். ஏனெனில் மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதி செரூபராணி பிரதிவாதி ஆவார். மேலும், அ.வ.எண்.75/2005 வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் வாதி ஏ அட்டவணை சொத்தில் சுவாதீனம் கோரி தாக்கல் செய்திருந்தார். அதில் 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட E.A.No.578/2007 அனுமதிக்கப்பட்டு 2ம் பிரதிவாதிக்கு 1/3 பங்கு சொத்து

உரிமை உள்ளது என்று உத்தரவு வழங்கப்பட்டது. மேலும், 3ம் பிரதிவாதி மேற்படி மனுவில் தன்னை கட்சிசேர்க்க கோரி தாக்கல் செய்த மனுவை கடந்த 05.08.2008 அன்று திரும்ப பெற்றுக்கொண்டார்.

**3.3)** மேலும், வழக்கு சொத்தில் 2/3 பங்கு சொத்தில் 1ம் பிரதிவாதி மட்டுமல்ல, பிரதிவாதிகள் அனைவரும் சுவாதீனத்தில் உள்ளனர். வழக்கு சொத்தில் 2/3 பாகம் பொருத்து வாதி கிரையம் பெற்றதாலேயே வாதியும், பிரதிவாதிகளுடன் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார் என்பது தவறாகும். மேலும், தாவா ஏ அட்டவணை சொத்தை பாகம் பிரிக்க 2014 ஏப்ரல் முதல் வாரத்தில் பிரதிவாதிகளிடம் வாய்மொழியாக கூறினார் என்பதையும், 3ம் பிரதிவாதியால் ஏ அட்டவணை சொத்தை பொறுத்து எதிர்காலத்தில் எந்த பிரச்சனையும் ஏற்படகூடாது என்பதற்காக அவரை அவசிய தரப்பினாராக கட்சி சேர்த்துள்ளார் என்பதையும் அவரே நிரூபிக்கவேண்டும். வழக்கு மூலம் தவறானது. எனவே, வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) <u>3ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

வழக்கு கூறப்பட்டுள்ள உறவுமுறையும், 1ம் பிரதிவாதிக்கு க..ச.எண்.108/2B யில் 0.29 புஞ்சை ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டு, மேற்படி சொத்து வாதிக்கு ரூ.1,06,000/−க்கு கடந்த 10.07.2003 அன்று கிரையம் செய்து தருவதாக வாதி, 1ம் பிரதிவாதிக்கு இடையே கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்பதும், அதில் 3ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்ற விபரமும், முன்பணமாக ரூ.50,000/− பெறப்பட்டுள்ளது என்ற விபரமும், வாதி மேற்படி கிரைய உடன்படிக்கைப்படி பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.75/2005 என்ற வழக்கு தாக்கல் செய்து, அது கடந்த 14.12.2005 அன்று தீர்ப்பானது என்பதும் சரியென ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**4.2)** 3ம் பிரதிவாதி பாகம் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.291/2006 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால்,

மேற்படி வழக்கில் க.ச.108 ல் 1.05.0 ஹெக்டர், 0.12.5 ஹெக்டேர் சொத்தில் அனைத்து பிரதிவாதிகளுக்கும் உரிமையுள்ளது என்று 2 ம் பிரதிவாதி கூறினார் என்பது தவறாகும். ஏனெனில் மேற்படி வழக்கு 3 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் 2 ம் பிரதிவாதி செரூபராணி பிரதிவாதி ஆவார். மேலும், அ.வ.எண்.75/2005 வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் வாதி ஏ அட்டவணை சொத்தில் சுவாதீனம் கோரி தாக்கல் செய்திருந்தார். அதில் 2 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட E.A.No.578/2007 அனுமதிக்கப்பட்டு 2 ம் பிரதிவாதிக்கு 1/3 பங்கு சொத்து உரிமை உள்ளது என்று உத்தரவு வழங்கப்பட்டது. மேலும், 3 ம் பிரதிவாதி மேற்படி மனுவில் தன்னை கட்சிசேர்க்க கோரி தாக்கல் செய்த மனுவை கடந்த 05.08.2008 அன்று திரும்ப பெற்றுக்கொண்டார்.

**4.3)** மேலும், வழக்கு சொத்தில் 2/3 பங்கு சொத்தில் 1 ம் பிரதிவாதி மட்டுமல்ல, பிரதிவாதிகள் அனைவரும் சுவாதீனத்தில் உள்ளனர். வழக்கு சொத்தில் 2/3 பாகம் பொருத்து வாதி கிரையம் பெற்றதாலேயே வாதியும், பிரதிவாதிகளுடன் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார் என்பது தவறாகும். மேலும், தாவா ஏ அட்டவணை சொத்தை பாகம் பிரிக்க 2014 ஏப்ரல் முதல் வாரத்தில் பிரதிவாதிகளிடம் வாய்மொழியாக கூறினார் என்பதையும், 3 ம் பிரதிவாதியால் ஏ அட்டவணை சொத்தை பொறுத்து எதிர்காலத்தில் எந்த பிரச்சனையும் ஏற்படகூடாது என்பதற்காக அவரை அவசிய தரப்பினாராக கட்சி சேர்த்துள்ளார் என்பதையும் அவரே நிரூபிக்கவேண்டும்.

**4.4)** மேலும், 3 ம் பிரதிவாதி மேற்படி கடந்த 10.07.2003 தேதியிட்டு வாதிக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய உடன்படிக்கையில் தரப்பினர் இல்லை. ஆனால், மேற்படி சொத்து 3 ம் பிரதிவாதியின் முன்னோர்களின் சொத்து என்பதால் அதில் 3 ம் பிரதிவாதிக்கும் பங்குள்ளது என்பதால் மேற்படி சொத்தில் 2/3 பங்கு பாகம் கேட்கும் வாதியின் வழக்கு

தள்ளுபடி செய்யப்படவேண்டியது. வாதிக்கு 1/3 பங்கு மட்டுமே உள்ளது. மேலும், வழக்கு மூலம் தவறானது. எனவே, வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**5) <u>வழக்கெழுவினாக்கள் :</u>**

வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர் வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கில் ஆய்வுக்காக கீழ்க்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளன.

(1) Whether the Plaintiff has got 2/3 shares in the suit property 'A' Schedule?

(2) Whether the Plaintiff is entitled for the relief of Partition and Separate possession with regard to 'A' Schedule property as prayed for?

(3) To what other reliefs?

**5)** இவ்வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில் வாதி தரப்பில் வாதி ரத்தினகுமார் **வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.16** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் வழக்கு விசாணையின் போது தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

**6)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**7) <u>எழுவினாக்கள் 1 மற்றும் 2–ற்கான தீர்வு:</u>**

1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி மகள் மற்றும் 3ம் பிரதிவாதி மகன் என்ற உறவுமுறையும், வாதி பிரதிவாதிகள் குடும்பத்திற்கு 3ம் தரப்பினர் என்பதும், 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.108/2B–யில் உள்ள 0.29 புஞ்சை ஏக்கரை வாதிக்கு கிரையம் செய்து தருவதாக கூறி ரூ.1,06,000/–க்கு கடந்த 10.07.2003 அன்று கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தி அதில் 3ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்திட்டுள்ளார் என்பதும், மேற்படி ஒப்பந்தப்படி

கிரையஉடன்படிக்கை ஏற்படுத்தி தராததால் 1ம் பிரதிவாதி பேரில் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.75/2005 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கில் வாதி சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டது என்ற சங்கதிகளும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆன தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை பரிசீலனை செய்கையில் மேற்கண்ட சங்கதி உண்மை நன்பது தெரியவருகிறது.

**8)** மேற்படி தீர்ப்பின்படி கிரையத்தை நிறைவேற்றி கொடுக்க வாதி பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் E.P.No.101/2006 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது வா.சா.ஆ.6–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. மேற்படி நிறைவேற்று மனுவில் 2ம் பிரதிவாதி தாவா ஏ அட்டவணை சொத்தானது பிரிபடாத சொத்து என்றும், அதில் தனக்கு 1/3 பங்கு சொத்துக்கள் தனக்கும் பாத்தயப்பட்டது என கூறி E.A.578/2007 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது வா.சா.ஆ.7–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. மேற்படி E.A.578/2007 ல் கடந்த 29.07.2013 தேதியன்று அனுமதிக்கப்பட்டு 2ம் பிரதிவாதிக்கு மேற்படி அ.வ.எண்.75/2005 கண்ட சொத்தில் 1/3 பங்கு பாத்தியப்பட்டது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மீதி 2/3 பங்கு சொத்தை பொறுத்து வாதி பெயருக்கு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தால் கிரையம் செய்துகொடுக்கப்பட்டது என்பது வா.சா.ஆ.8 ஆன கிரையப்பத்திரத்தை பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. பின்னர் மேற்படி வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை சுவாதீனம் பெற நிறைவேற்று மனு E.P.No.88/2013 தாக்கல் செய்யப்பட்டபோது, வாதிக்கு 2/3 சொத்தில் பெயரளவிலான சுவாதீனம் மட்டுமே உள்ளது என்று மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது வா.சா.ஆ.9–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது.

**9)** மேலும், பிரதிவாதிகளுக்கு க.ச.நெ.108ல் பு.ஹெக்.1.50.0, பு.ஹெக்.0.12.5 பூமி இருப்பதாகவும், அது பாகம் பிரிபாடாத சொத்து எனவும்,

அதில் பாகப்பிரிவினை தரக்கோரி 3ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.291/2006 என்ற எண்ணில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு கடந்த 03.10.2012 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது வழக்குரை, தீர்ப்பு மற்றும் தீர்ப்புரையான வா.சா.ஆ.10, வா.சா.ஆ.15 மற்றும் வா.சா.ஆ.16–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. மேலும், பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.75/2005 வழக்கு தீர்ப்பிற்கு பிறகு நிறைவேற்று மனு எண்.101/2006 நிலுவையில் இருக்கும் போது 3ம் பிரதிவாதி மகாலிங்கம் வழக்கு சொத்தில் தமக்கும் பங்கு இருப்பதாகவும், ஆனவே தன்னையும் கட்சி சேர்த்திட வேண்டி E.A.No.1254/2006 என்ற மனுவை தாக்கல் செய்து பிறகு அவர் மனுவை திரும்ப பெற்றுக்கொண்டார் என்பது வா.சா.ஆ.14 ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது.

**10)** மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வழக்கு ஏ அட்டவணை சொத்தை பொறுத்து வாதியும், 1ம் பிரதிவாதியும் செய்துகொண்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாதி அ.வ.எண்.75/2005 என்ற அசல் வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கில் வாதி சார்பாக வழங்கப்பட்ட தீர்ப்பின்படி 1ம் பிரதிவாதி கிரையப்பத்திரம் நிறைவேற்றி கொடுக்காததால் பொள்ளாச்சி, சார்பு நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து 2ம் பிரதிவாதியின் 1/3 பாகம் போக வழக்கு ஏ அட்டவணை சொத்தில் பிரிபடாத 2/3 பங்கு சொத்தை பொறுத்து வாதி பெயரில் பொள்ளாச்சி சார்பு நீதிமன்றம் கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்துகொடுத்துள்ளது என்ற சங்கதி வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**11)** 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகள் மற்றும் வாதிக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.291/2006 என்ற வழக்கை தாக்கல் செய்து அவ்வழக்கானது கடந்த 03.10.2012 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கிடையே வழக்கு ஏ அட்டவணை

சொத்தை பொறுத்து ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் 3ம் பிரதிவாதி சாட்சி கையெழுத்திட்டுள்ளார். அதுமட்டுமின்றி வாதி தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண்.101/2006ல் தன்னையும் ஒரு தரப்பினராக சேர்க்க சொல்லி E.A.1254/2006 என்ற மனுவை தாக்கல் செய்து, பிறகு அதையும் திரும்ப பெற்றுள்ளார். ஆகவே, வழக்கு சொத்தில் தனக்கு இருப்பதாக சொல்லும் உரிமைபற்றி தெரிந்தும், அதை வலியுறுத்தாமல் மேற்படி செயல்களை செய்துள்ளார். மேலும், தன்தரப்பில் வைக்கப்பட்டுள்ள எதிர்வாதத்தை நிரூபிக்கும் பொருட்டு 3ம் பிரதிவாதியோ அல்லது 1,2 பிரதிவாதிகளோ நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாய்மொழிசாட்சியமோ, ஆவணசாட்சியமோ அளிக்கவில்லை.

ஆகவே, மேற்கண்டவாரான பரிசீலனையிலிருந்து, வழக்கு ஏ அட்டவணை சொத்தில் 2/3 பங்கு பாகம் தனக்கு பாத்தியப்பட்டது என வாதி கோரும் முதல்நிலை தீர்ப்பாணை அவருக்கு கிடைக்கத்தக்கது என்று மேற்கண்ட எழுவினாக்களுக்கு தீர்வுகாணப்படுகிறது.

**12)** **<u>எழுவினா 3 :</u>**

**(3) இதரப் பரிகாரங்கள் என்ன?** என்ற எழுவினாவிற்கு தீர்வு காண்கையில், 1 மற்றும் 2 எழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதால், மேற்கொண்டு வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதி எழுவினா 3ற்கும் அதன்படியே தீர்வு காணப்படுகிறது.

**13)** முடிவில், இவ்வழக்கு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, வழக்கு ஏ அட்டவணை சொத்தில் 2/3 பாகத்திற்கு பாகப்பிரிவினை பெறுவதற்கு வாதி உரிமையுடையவர் என்றும், வாதியின் பங்கை பிரதிவாதிகள் தீர்ப்பு தேதியிலிருந்து 2 மாதத்திற்குள் பிரித்து கொடுக்கவேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டி மனுதாக்கல் செய்ய

வாதிக்கு அனுமதி அளித்தும் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்ததை, என்னால் பிழை நீக்கம் செய்து 2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
பொள்ளாச்சி.

**வாதி தரப்பு சாட்சி :**

வா.சா.1. ரத்தினகுமார் (வாதி)

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.07.1993 | செல்லமுத்து கவுண்டர் மற்றும் வகையறாக்களுக்குள் செய்து கொண்டு பாகசாசனத்தின் சான்று நகல் |
| வா.சா.ஆ.2 | 11.06.2003 | செல்லமுத்து கவுண்டரும், அவரது வாரிசுகளும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணம் சான்று நகல் |
| வா.சா.ஆ.3 | 10.07.2003 | 1ம் பிரதிவாதியும், நானும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரம் |
| வா.சா.ஆ.4 | 14.12.2005 | அ.வ.எண்.75/2005ல் மாண்புமிகு பொள்ளாச்சிசார்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை ஒளிநகல் |
| வா.சா.ஆ.5 | 14.12.2005 | அ.வ.எண்.75/2005ல் மாண்புமிகு பொள்ளாச்சிசார்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் உண்மை நகல் |
| வா.சா.ஆ.6 | | அ.வ.எண்.75/2005ல் நிறைவேற்று மனு 101/2006ன் மனு மற்றும் உத்தரவின் உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | 11.11.2008 | E..A. 578/2007ல் மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றதால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.8 | 29.07.2013 | மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றம் வாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரம் சான்று நகல் |
| வா.சா.ஆ.9 | 30.04.2014 | மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றம் நிறைவேற்று மனு 88/2013 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் உண்மை நகல் |
| வா.சா.ஆ.10 | | அ.வ.எண்.291/2006 ன் வழக்குரையின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | | தாவாசொத்து அமைந்துள்ள க.ச.106 மற்றும் 108 ன்வரைபடம் உண்மைநகல் |
| வா.சா.ஆ.12 | | வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிநகல் |
| வா.சா.ஆ.13 | | E.A.No.1253/2006 in EB.No.101/2006 in OS No.75/2005 தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் |
| வா.சா.ஆ.14 | | E.A.No.1254/2006 in EB.No.101/2006 in OS No.75/2005 தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் |
| வா.சா.ஆ.15 | 03.01.2012 | அ.வ.எண்.291/2006–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.16 | 03.01.2012 | அ.வ.எண்.291/2006 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் சான்றிட்ட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பட்டியல் :**

–இல்லை–

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---------------------------------------

**அசல் / வரைவு தீர்ப்புரை**
அ.வ.எண்.407/2015
நாள் : 30.01.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---------------------------------------